# ஜாமக்காரன்

# JAMAKKARAN

VOLUME - 1 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 11

NOVEMBER 2017 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

**உங்களுக்கு கிறிஸ்துவின் சமாதானம் நிறைவாய் கிடைப்பதாக.**

கடந்தமாத ஜாமக்காரன்(அக்டோபர் 2017) வாசித்திருப்பீர்கள். CSI சபைகளின் நிலை ஆபத்தைநோக்கி போய் கொண்டிருப்பதை ஓரளவு உணர்ந்திருப்பீர்கள். நாம் எந்த ஊழியம் செய்தாலும் வாழ்கிற நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே ஊழியம் செய்ய நம் வேதம் நமக்கு போதிக்கிறது. ரோ 13:1-4,தீத்து 3:1,பேதுரு 2:14,1தீமோ 2:1,2. நம் கிறிஸ்தவ வேதம் இப்படி தெளிவாக கூறியிருக்க நம் CSI சபை ஆரம்ப காலத்தில் யாரோ சில தலைவர்களால் அரசாங்க சட்டத்துக்கு விரோதமாக தாங்களே ஒரு Constitution சட்டத்தை இயற்றி அதனால் நம் காணிக்கை பணத்தை பெரும்அளவு கொள்ளையடித்தும், மிஷனரிகள் நமக்கும் சபைக்கும் நம் சந்ததிக்கும் இலவசமாக அளித்த நிலங்களை சொத்துக்களை தங்கள் இஷ்டத்துக்கு விற்று பணமாக்கி கொள்ளையடித்த விவரங்கள் அரசாங்கத்துக்கு தெரிய வந்தது. இன்று சிஎஸ்ஐ சபை அரசாங்க விசாரணையில் அகப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் CSI TA என்ற கம்பெனி சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டு அன்றைய காலத்து சபை தலைவர்கள் மிக நன்றாக சபை சொத்துக்களை பராமரித்தார்கள். பண விஷயத்தில் உண்மையாக இருந்தார்கள். தெய்வபயம் அவர்கள் மனதில் இருந்தது. இந்த உண்மை செயல்பாட்டினால் தான் அன்று **கத்தோலிக்க திருசபையின்** ஆங்கில பாதிரியார்களை அன்றைய ஆட்சியினர் வெளியேற்றிதால் தங்களின் **சமூக தொண்டு** நிறுவனங்களை(சென்னையில் மட்டும்) மக்களுக்கு யார் மூலமாவது நன்மையும் உதவிகளும் கிடைக்கட்டும் என்ற ஒரே காரணத்தால் அன்று CSI TA மிக உண்மையாக

NOVEMBER 2017

தொண்டுகளை செய்து பணத்தை உண்மையாக செலவழித்து நடத்தி வந்தார்கள் அவர்களின் அந்த **உண்மை செயலை** கண்டதால்தான் **கத்தோலிக்க சபை** CSI TA வுக்கு தங்களின் 234 தொண்டு நிறுவனங்களையும் அதை சார்ந்த அசையும், அசையாக சொத்துக்களையும் ஒப்படைத்தது.

ஆனால் இன்றோ CSI யில் உள்ள பொருப்பாளர்கள் பல இடத்தில் தங்கள் கள்ளத்தனத்தால் தங்கள் பெயரை கெடுத்துக் கொண்டது. சபையில் எங்கு பார்த்தாலும் ஊழல், **பதவிமோகம்** காரணமாக **பிஷப் பதவிக்காக** கோடிக்கணக்கில் **லஞ்சம்** கொடுத்தார். தேவ பிரசன்னம் CSI சபைகளை விட்டு நீங்கி மக்களின் நன்மதிப்பை இழந்தது. அனைத்திலும் வியாபார சிந்தை,**சபை காணிக்கைகளை** ஒவ்வொரு திங்கட்கிழமையும் வங்கியில் செலுத்தப்படவேண்டும் என்பது சட்டம். ஆனால் பல CSI சபைகளில் ஞாயிறுகிழமை ஆராதனையில் மக்கள் அளிக்கும் **காணிக்கைகளை** வங்கியில் சேர்க்காமல் அந்த பணத்தை **தினசரி** வட்டிக்கும், **வார** வட்டிக்கும் கொடுத்து பணம் சம்பாதிக்கும் வெட்கக்கேடு பல சபைகளில் நடப்பதை நானே அறிவேன். ஆயர்கள் அதை எதிர்த்தால் முழு கமிட்டியும் அவரை உடனே இடமாற்றம் செய்யும்படி பிஷப்பை மிரட்டுகிறார்கள். பிஷப்பும் சபை கமிட்டி உதவி தன் பதவிக்கு தேவை என்பதால் நல்ல ஆயர்களை இடமாற்றம் செய்கிறார். இதை தவறு என்று கூறுகிற சபை அங்கத்தினர்களை சபையை விட்டு (Excoumunicat) நீக்குகிறார்கள். ஒரு சிலர்தான் கோர்ட்டுக்கு போய் நீதி கேட்க நீதிமன்றம் நாடுகிறார்கள். நீதிமன்றம் அவர்களை மீண்டும் சபையில் சேர்க்க கட்டளையிட்டதால்தான் அவர்கள் தன் **அங்கத்தினர் உரிமையை** மீண்டும் பெருகிறார்கள். கோர்ட்டுக்கு போகாதவர்கள் அருகில்உள்ள பிழையான உபதேசத்தை கொள்கையாக கொண்ட பெந்தேகோஸ்தே சபைகளுக்கு போய்விடுகிறார்கள்.

CSI காம்ப்ளக்சில் உள்ள கடைகள் வாடகைக்கு விடும்போதும் **அட்வான்ஸ்** வாங்கும் போதும் எத்தனை ஊழல்கள் நடக்கிறது. அட்வான்ஸ் தொகையை எழுதும்போது ரசீதில் குறிப்பிட்ட சிறு தொகை மட்டும் காண்பிக்கப்படுகிறது. ஆனால் **நிர்வாகிகள் முதல் பிஷப்** வரை **பெரும்தொகையை** அட்வான்ஸ் கொடுத்தவரிமிடருந்து வாங்கி அலிபாபா 40 திருடர்களைப்போல தங்களுக்குள் பங்கு போட்டுக்கொள்கிறார்கள். இவர்களெல்லாம் (புல்பிட்டில்) பிரசங்க மேடை ஏறி எப்படி பிரசங்கிக்கிறார்கள்.? எப்படி இவர்களால் ஜனங்களுக்கு சத்தியத்தை உபதேசித்து ஜெபிக்க முடிகிறது. **ஆசீர்வாத தட்டு** என்ற ஏல வியாபாரம் தவறு என்று எத்தனை முறை அறிவித்தும் சில சபைகள் கமிட்டியில் அதை குறித்து விவாதித்ததும் அதன் முடிவு தோல்வியாகிறது. **ஆசீர்வாதத்தை** ஏலத்தில் விலைக்கு வாங்கும் ஹோல்சேல் வியாபாரிகளால் கமிட்டியில் வைக்கப்பட்ட ஆசீர்வாத தட்டு நம் சபையில் வேண்டாம் என்ற தீர்மானம் தோல்வியில் முடிந்தது. அது ஏகமனதாக தோற்கடிக்கப்படுகிறது. எல்லாம் லாப நோக்கத்தில் வியாபாரமாக மாறி சபைகள் கள்ளர் குகையாய் மாறிப்போனது. அன்று **சாலமோனுக்கு எதிராக இரண்டு சத்துருக்களை கர்த்தரே எழுப்பி சாலமோன் ஆட்சிக்கு கேடுகளை** உண்டாக்க வைத்தார். அதுபோல் இன்று **CSI சபைக்கு** எதிராக பிரச்சனை எழும்பிவிட்டது. CSI ஒவ்வொன்றாக CSI சினாடியிலிருந்து பிரிந்து, **தன்னாட்சி, சுயஆட்சி** என்று அரசியல்வாதிகள் கூறுவதுபோல பிரிய ஆரம்பித்துவிட்டது.

வேதம் கூறுவதுபோல எல்லாவற்றிக்கும் ஒரு முடிவு உண்டு. அந்த முடிவு CSI சபைகளுக்கு நெருங்கிவிட்டது.

ஆளுகின்ற BJPஅவர்கள் பின்னாலுள்ள RSSஆகிய இவர்கள் வாய்க்கு CSI பிரச்சனை கள் **அவல் கிடைத்தது**போல இவர்கள் சபைகளை இல்லாமல் ஆக்க, CSI யின் **சட்ட விரோத**

**நடவடிக்கைகளை** கண்டுபிடித்து அவைகளை இப்போது கையில் எடுக்க ஆரம்பித்துவிட்டது.

இப்போது CSI சபை விசுவாசிகள் விழித்துக்கொண்டார்கள். இவர்களின் தவறான சட்டத்துக்கு விரோதமான செயல்களுக்குரிய தண்டனையை நீதிமன்ற தீர்ப்பிலிருந்து இவர்கள் காப்பாற்றப்பட இவர்கள் கோர்ட் செலவுக்கு நம்முடைய காணிக்கை பணத்திலிருந்துதான் பணம் எடுக்க முயலுவார்கள் , அப்படி செய்யாதபடி சிஎஸ்ஐ சபை ஜனங்கள் எச்சரிக்கையோடிருக்க வேண்டும். **நம்முடைய** பிரதிநிதிகள்தான் **சபை கமிட்டி மெம்பர்கள்,** DC **மெம்பர்கள்** இவர்கள்தான் நம் எண்ணத்தை பிரதிபலிப்பவர்களாகும். நீங்கள் தெரிந்தெடுத்த DC மெம்பர்களை **சபை நிர்வாகிகளை** நீங்கள் தைரியமாக சினாட்டில் கேள்விகேட்க சொல்லுங்கள். அப்படி அவர்களை கேள்விகேட்க கட்டளையிடுவதற்கு உங்களுக்கு சட்டப்படி முழு உரிமை உண்டு.

குறிப்பாக, **அரேபியாவில் உள்ள சபைகள்,அமெரிக்கா,ஐரோப்பா,ஆஸ்ட்ரேலியா** எங்கும் பரந்து கிடைக்கும் **CSI சபை அங்கத்தினர்களாகிய** நீங்கள் பிஷப்மாரிடம் கேள்வி எழுப்பவேண்டும். டையேசிஸஸின் ஒவ்வொரு **தேவைக்காக ஆலயம் கட்ட, சமூக பணியற்ற** ஒவ்வொரு டையோசிஸ்சின் **பிஷப்மார்கள்** கையேந்தி **பெரும் தொகையை** எதிர்பார்த்து வருவது **உங்களிடம் தான்.** நீங்கள் **பிஷப்பையும் கூட வரும் நிர்வாகிகளையும்** உட்கார வைத்து **CSIயில் என்ன நடக்கிறது?** ஏன் எங்களுக்கு **நீதிமன்ற விவகாரங்களை** அறிவிக்கவில்லை?. சபையின் அதிகார **பத்திரிக்கை** மூலமாக அல்லது **சினாட்** வெளியிடும் **மாத பத்திரிக்கை** மூலமாகவாவது விவரங்களை ஏன் எழுதி அறிவிக்கவில்லை? என்று ஒவ்வொருவரும் கேள்வி எழுப்பவேண்டும்.

நீங்கள் அவர்களிடம் கொடுத்த பணத்தை அவர்கள் எப்படி செலவழித்தார்கள் என்று அவர்களிடம்(பிஷப்மார்களிடம்) கேள்வி கேட்க **பணம்** கொடுத்த **உங்களுக்கு உரிமை உண்டு.** அரேபியா நாடுகளில் **ஷார்ஷா மலையாள சிஎஸ்ஐ** சபையினர் **கோட்டயம் பிஷப்** அவர்களிடம் ஏழை பிள்ளைகளுக்காக நடத்தும் **கைத்தொழில்** ஸ்தாபனத்துக்கென்று பெரும் பணம் தொகையை **ஷார்ஷா** CSI சபையிலிருந்து கொடுக்கப்பட்டது. அதில் **சிறுதொகை** மட்டும் கைத்தொழில் ஸ்தாபனத்தின் தேவைகளுக்காக செலவிடப்பட்டது. மீதி தொகைக்கு இதுவரை **கணக்கு அறிவிக்கப்படவில்லை** என்று புகார் அளித்ததாக அறிந்தேன். இரண்டு வருடங்கள் ஆகியும் அவர்களிடமிருந்து பதில் இல்லை. **இனி நாங்கள் என்ன செய்யவேண்டும்** என்று . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . !

ஆகவேதான் மனம்நொந்து எழுதுகிறேன். CSIயில் **மாட்டீன் லூத்தர்** காலத்தில் எழும்பிய சீர்திருத்தம் மிக சீக்கிரம் உண்டாக வேண்டும். அதை CSI சபையில்உ ள்ள கணவான்கள் சபையில் உள்ள சபை மக்கள் மிகவும் **மதிக்கும் நபர்கள்** இந்த சீர்திருத்தத்துக்கு பொருப்பெடுக்காவிட்டால் BJP ஆட்சியில் CSI மக்களாகிய நாம் ஆராதிக்க CSI சபை என்ற பெயரில் **ஆலயமே இருக்காது. நம் பிள்ளைகள் நம் சந்ததியினர்** நம்மை பார்த்து கேள்வி கேட்பார்கள். என்ன பதில் சொல்வோம், என்ன நடவடிக்கை எடுக்கபோகிறோம் ?

இப்படிப்பட்ட விவகாரங்களால் நாம் யாரும் CSI சபையை விட்டுவிலகி நமக்கெதற்கு வம்பு என்று **வேறு சபைக்கு** தாவிவிடாதீர்கள். இப்படி எல்லாரும் கேள்வி கேட்காமல் சபையை விட்டுப்போனால் CSIயை ஆளுகிறவர்கள் தொடர்ந்து ஊழல் செய்ய சவுகரியமாகிபோகும். தேவன் CSI சபையின் அங்கமான நம்மிடம் தான் கணக்கு கேட்பார்? எச்சரிக்கை!.

கடந்த மாத ஜாமக்காரனை வாசித்த பலர் **எனக்காக,என் பாதுகாப்புக்காக** மிகவும் **பயத்தோடும், பாரத்தோடும், கரிசனையோடும் ஜெபிப்பதாக எழுதியுள்ளனர்.** அப்படி

எழுதியவர்களுக்கும், போன் வழியாக விசாரித்தவர்களுக்கும், **ஜெபித்தவர்களுக்கும்** நன்றி கூறுகிறேன். **என்னைக்குறித்து கவலை வேண்டாம்.** என்னை எழுத வைத்த நம் ஆண்டவரினஅனுமதியில்லாமல் எனக்கு ஒன்றும் நேராது. அப்படியே கன்வென்ஷனில் பேச தடையோ,பிரச்சனையோ உண்டாக்கினாலும் எனக்கு பிரச்சனையில்லை.அவைகயெல்லாம் நான் எதிர்ப்பார்த்ததுதான். இவைகளை உங்கள் நன்மைக்காகவும் நம்முடைய 24 CSI சபைகளின் நன்மைக்காகவும் மாத்திரம் இவைகளை எழுதினேன். நீங்கள் இதற்காக எப்படி செயல்படமுடியுமோ அவரவர்கள் சிஎஸ்ஐ டையோசிஸ்ஸில் உள்ளவர்கள் கூடி யாவரும் ஆங்காங்கே கூடி ஜெபித்து செயல்படுங்கள். உண்மையுள்ள பல **ஆயர்கள்** CSIயில் உண்டு. அவர்கள் உங்களோடு இணையாமல் வெளியிலிருந்து உங்களுக்கு ஆலோசனையும், விவரங்களையும் அளிப்பார்கள்.

- இந்த ஜாமக்காரன் சிஎஸ்ஐ அல்லாத மற்ற வாசகர்களுக்கு பிரயோஜனப்படாது. குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் ஜாமக்காரன் வாசகர்களுக்கு இந்த மாத ஜாமக்காரன் சோர்வை உண்டாக்கும். பொருத்துக்கொள்ளுங்கள். சிஎஸ்ஐ சபை பிரச்சனைகளை விட்டுவிட்டு அதை தொடர்ந்து நான் எழுதியுள்ள வசன செய்திகளை வாசித்து பயன்பெற கேட்டுக்கொள்கிறேன்.

- இந்த மாத ஜாமக்காரன் அனைத்து மாநிலங்களிலும் உள்ள சிஎஸ்ஐ சபை விசுவாசிகளுக்காக மட்டும் எழுதப்பட்டதாகும்.

- உங்கள் அனைவருடைய ஜெபகுறிப்புகளுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. நீங்கள் ஆன்லைன் மூலமாக, பேங்க் வழியாக அனுப்பிய காணிக்கை வந்து சேர்ந்தது. சிலருக்கு மட்டும் இன்னும் ரசீது அனுப்பவில்லை. மணியாடர், காசோலை வழியாக காணிக்கை அனுப்பிய அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் பெயரால் நன்றி கூறுகிறேன்.

- கடந்த மாதங்களில் நடந்த எல்லா கன்வென்ஷன் கூட்டங்களும் கிராம ஊழியங்களும் ஆசீர்வாதமாக நடந்தேறியது. பெரும் மழை பெய்தும் கூட்டங்களுக்கு சிறிதும் பாதிப்பு இல்லாதபடி கர்த்தர் கருணை காட்டினார்.

கர்த்தரின் கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

கர்த்தரின் பணியில்

**டாக்டர் புஷ்பராஜ்**

# முக்கிய அறிவிப்பு

**டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு வாட்ஸ்அப், பேஸ்புக் எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக் குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் அந்த வாட்ஸ்அப், பேஸ்புக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன்.**

**அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன். - டாக்டர் புஷ்பராஜ்**

# C.S.I. சபைகளின் விசுவாசிகளுக்கு 70 வருடங்களாக மறைக்கப்பட்ட இரகசியம்

# சபையா? கம்பெனியா?

நம்முடைய CSI சபையைப்பற்றிய சரித்திர விவரம் அறியாமல் CSI சபைகளில் ஆராதித்துக் கொண்டிருப்பவர்கள் ஏராளம். ஒரு சிலர் சபையைப்பற்றிய விவரத்தை மேலோட்டமாக மட்டும் அறிவார்கள். இப்போது **CSI சபைக்குள்** பல பிரச்சனைகளைக்குறித்து நீதிமன்றம் விசாரிக்க ஆரம்பித்த உடன் சபை **கான்ஸ்டிட்டியூசன் செயல்களும்** (CSITA) **CSI Trust Association** ஆக பதிவு செய்யப்பட்டபோது இருந்த **கம்பெனி** சட்டத்துக்கும் மிகப்பெரிய வித்தியாசத்தை கண்டுபிடித்துள்ளார்கள். அரசாங்கம் அனுமதித்த **கம்பெனி** சட்டங்களை மீறி **அரசாங்க சட்டத்துக்கு** விரோதமாக CSI தலைமையின் செயல்பாடுகள் இருப்பதாகவும் குறிப்பாக **CSI சினாடின்** செயல்களும் சட்டத்துக்கு விரோதமாக இருப்பதை **நீதிமன்ற தீர்ப்புகள்** மூலம் வெளி உலகம் அறிந்தது CSIயில்உள்ள முக்கியமான சிலரும் அவைகளை அறிந்தனர். இப்போது SFIO துறையினர் முழு CSI சபைகளைக்குறித்தும் விசாரிக்க தொடங்கிவிட்டனர். இதை அறிந்த பல CSI டையோசிஸ்கள் CSI சினாட்டிலிருந்து வெளிவர துடிக்கின்றன. **அரசாங்க தண்டனையிலிருந்து** தப்பிக்கவும் வேறு சில காரணங்களின் அடிப்படையிலும் சிஎஸ்ஐ சினாடிலிருந்து சில சிஎஸ்ஐ டையோசிஸ்கள் வெளிவர தொடங்கிவிட்டன.

## CSI திருநெல்வேலி டையோசிஸ்

நான் ஏற்கனவே ஜாமக்காரனில் குறிப்பிட்டதுபோல CSIயிலிருந்து **முதல் வெளியேற்றம்** தென்இந்தியாவில் உள்ள CSI திருமண்டலங்களில் மிகப்பெரிய டையோசிஸ்ஸான CSI **திருநெல்வேலி டையோசிஸ்** ஆகும்.

இப்போது **திருநெல்வேலி டையோசிஸ்** சபைகளின் பெயர் பலகையிலும், லெட்டர்ஹெட்டிலும் CSI என்பதை **முழுவதுமாக நீக்கிவிட்டனர்.** அதற்கு பதிலாக TDTA Church TDTA Hr. Sec. School இப்படி அனைத்திலும் CSI என்பதை நீக்கிவிட்டனர்.

முதலாவது CSI பிஷப் **Rt. Rev. J.J. கிறிஸ்துதாஸ்** அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இவர்தான் **புதிய சட்டதிருத்தம்** கொண்டுவர அதில் **பிஷப், ஆயர்களின்** ஓய்வு வயது 65லிருந்து 67ஆக மாற்றி கமிட்டி அங்கீகாரம் பெற குறுக்குவழியில் **நெல்லை கத்தீட்ரல்** சபையில் பயங்கர **எதிர்ப்புக்கு மத்தியில் எலக்ஷன் நடத்தமுடியாமல்** சட்டதிருத்தம் ஏகமனதாக நிறைவேறியது என்பதை கூறமுயன்றபோது பலர் மேடையில் ஏறி **பிஷப்** கையிலிருந்து மைக்கை பிடுங்கினர். உடனே **பிஷப்** சட்டதிருத்தம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்று சத்தமாக கூற உடனே போலீஸ் அவரை அப்புறப்படுத்தியது. இப்படி தவறான முறையில் சட்டதிருத்தம் கொண்டுவர **மாடரேட்டர்** அவர்களின் **கள்ள திட்டத்துக்கு** துணைபோன காரணத்தால் இன்று CSIயின் பழைய சட்டப்படி 65வது வயதிலேயே டையோசிஸ் அவரை **பதவிநீக்கம்** செய்தது. வரும் 2018 மார்ச் மாதம் CSIயின் பழைய சட்டப்படி **பிஷப் அவர்கள் ரிட்டயர்ட்** ஆகிறார். **கள்ள வழிகளில்** ஓய்வு வயதை கூட்ட அவர் முயன்றதால் **தேவ கோபத்துக்குள்ளானார்.**

இப்போது அவரின் பிஷப் பதவிபோனவுடன் மக்களுக்கு **பிஷப்** மேலுள்ள மரியாதையும் போயிற்று பயமும் நீங்கிற்று. அதனால் அவர்மேல் சில பெண்கள் **பாலுறவு** புகார்களை கூற ஆரம்பித்துவிட்டனர். **களக்காடு,திருநெல்வேலி,பாளயங்கோட்டை** போன்ற இடங்களிலிருந்தெல்லாம் புகார்கள் எழுந்தன. **இவர் ஆயராக ஊழியம்** செய்த ஒரு சபையிலிருந்து சில **புகார்களும் பிஷப்புக்கு** எதிராக இப்போது எழும்ப ஆரம்பித்துவிட்டது.

இப்போது **திருநெல்வேலி டையோசிஸ்** நிர்வாகத்தை Vice Chairman, Lay செக்ரட்டரி அவரோடுள்ள **புதிய நிர்வாக கமிட்டி** ஏற்றெடுதுள்ளது. இவர்கள் கல்லூரி பிரின்சிபால், லெக்சரர் ஆகிய பதவி நியமனங்கள், மற்ற **பதவிகளுக்கு நியமனங்களை எதிர்ப்புகள் எதுவும் இல்லாமல்** அமைதியான முறையில் நிறைவேற்றியிருப்பதாக கேள்விப்பட்டேன்.

# நெல்லை டையோசிஸ் இப்போது கம்பெனி நிர்வாகத்தின் கீழ் வந்தது.

**கம்பெனி** Bபோர்டில் 9 பேர் உண்டு. அதில் **சேர்மேனாக Mrs.Vijila** அவர்களும், Mr. Rathan Tata அவர்கள் உட்பட 8 டைரக்டர்கள் சேர்ந்து தங்கள் நிர்வாக வேலையை தொடங்கிவிட்டதாக அறிந்தேன். இனி இவர்கள்தான் **திருநெல்வேலி டையோசிஸ்க்கு புதிய பிஷப்** ஒருவரை நியமிப்பார்கள். (எலக்ஷன் நடக்காது) இந்த புதிய மாற்றத்தில் புதிய நிர்வாகத்தால் நெல்லை டையோசிஸ்ஸில் உள்ள சபைகள் எப்படி **ஆன்மீகத்தில் வளருமோ?** என்பதை பொருந்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## மெட்ராஸ் டையோசிஸ்

**திருநெல்வேலி** டையோசிஸ்க்கு அடுத்ததாக CSIயிலிருந்து வெளியேறப்போவது **மெட்ராஸ்** CSI டையோசிஸாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. அதை தொடர்ந்து **திருச்சி-தஞ்சாவூர்** சிஎஸ்ஐ டையோசிஸ்ஸீம் பிரிய போவதாக கேள்விப்பட்டேன். **ஆந்திராவிலும் CSI** டையோசிஸ்ஸிம் CSIயிலிருந்து பிரிய அங்கு சில டையோசிஸ்கள் யோசிக்கிறதாக அறியப்படுகிறது. இப்படி நடந்துவிடக்கூடாது என்பதற்காகதான் பல வருடங்களுக்கு முன்பே 35 வருடங்களுக்குமுன் நியமித்த **பால் கமிஷனின்** அறிக்கையின் ஆலோசனைப்படி CSIயில் Reformation உண்டாக **பிஷப்மார்களும்,ஆயர்களும்** சபை சொத்துக்களை விற்காமல் பண விஷயத்தில் தலையிடாமல் சபை மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சியில் மட்டும் அவர்கள் கவனம் செலுத்தும் ஏற்பாடுகளை செய்ய ஜாமக்காரனில் எழுதினேன். அப்படி செய்திருந்தால் **பிஷப்மார்களுக்கும் , ஆயர்களுக்கும்** இந்த கெட்ட பெயர் வந்திருக்காது. CSI சபைகளும் **உடைந்து போகாதிருந்திருக்கும்.** ஆனால் இப்போது பிரச்சனை **தலைக்குமேல்** போய்விட்டது.

# C.S.I. சபை தோன்றிய வரலாறு

16ம் நூற்றாண்டுகளில் **ஐரோப்பா கண்டத்தில்** அனைத்து நாடுகளும் வளர்ச்சியை நோக்கி போய்கொண்டிருந்தது. குறிப்பாக (Industrial Revolution) தொழில் புரட்சியை நோக்கி ஓடிக்கொண்டிருந்த நேரமது **ஐரோப்பியர்களின்** நாட்டில் உள்ள ஆலைகளுக்கு **பருத்தி, சணல்** தேவைப்பட்டது. அந்த பொருள் கிடைக்கும் இடமாக அவர்கள் **இந்தியாவை** கண்டறிந்தனர்.

இந்தியாவின் வளங்களை அவர்கள் தங்கள் உபயோகத்திற்காக பயன்படுத்த பருத்தி சணல் ஆகியவைகளை சேகரித்து ஏற்றுமதி செய்ய ஐரோப்பிய ராஜ்ஜியங்களிலிருந்த பலர் இந்தியா வந்தடைந்தனர். அப்படி வந்தவர்களில் சிலர் **இந்தியாவிலுள்ள அறியாமையையும் ஏழ்மையையும்** கண்டு மனமுருகி இந்திய மக்களுக்கு தங்களுடைய எல்லா சேமிப்புகளையும் அற்பணித்து **பாடசாலைகள் பணிது,வயோதிகர்,முடவர்,செவிடர்,குருடர்களை** பாதுகாக்க தனி ஏற்பாடுகள் செய்து **கல்லூரிகள்,தொழில்கூடங்கள்,மருத்துவமனைகளையும்** ஆங்காங்கே நிறுவினர்.

அன்று இந்தியாவில் வாழ்ந்த மக்கள் தாங்கள் **எதைகண்டு பயந்தார்களோ** அதையேயெல்லாம் **கடவுள்** என நம்பினர். அவர்களுடைய இப்படிப்பட்ட **அறியாமையை அகற்றுவதற்காக ஆலயங்களை** நிறுவி **இயேசுவை** உண்மையான **அன்புள்ள தெய்வமாக** அவர்களுக்கு அறிவித்து இந்தியாவிலுள்ள மக்களும் தங்களைப்போல வளமாக வாழவும் வளரவும் வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டனர். அந்த சூழ்நிலையில் இந்திய நாடு **சுதந்திரத்தை** நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போது ஏற்கனவே இந்தியாவில் பல்வேறு விதமான **தொண்டுபணிகளை** அறங்கேற்றி வந்த **கிறிஸ்துவ குழுக்களுக்கு மத்தியில்** ஒரு **ஒருங்கிணைப்பு** தேவைப்பட்டது. அதற்காக அவர்கள் ஒருங்கிணைப்பு ஏற்பாடு ஒன்றை ஏற்படுத்தினர். அந்த நல்ல ஐரேப்பியமக்கள் தங்களுடைய **இந்தியாவிலுள்ள சொத்துக்களை** அந்த **ஒருங்கிணைப்பு குழுவிடம் ஒப்படைத்து** தாங்கள் ஆரம்பித்த **சமூகதொண்டின்** நோக்கம் முடிவடைந்தது என்று திருப்தியடைந்தனர்.

உலகின் வெவ்வேறு நாடுகளிலிருந்தும் **இந்தியாவுக்கு** வந்த வெவ்வேறு குழுக்களின் வித்தியாசமான **ஆராதனைகளை அவரவர்கள் தங்கள் நாட்டு ஆராதனை வழிபாட்டு** முறைகள்படி **வெவ்வேறு விதமாக ஆராதனை** செய்து வந்தனர். அதே சமயம் இந்த சபையினர் நடத்தும் சபை ஆராதனை,தொண்டு நிறுவனங்கள் இவை யாவையும் அன்று அவர்கள் சிறந்த முறையில் நடத்துவதைக்கண்டு இந்தியாவை ஆண்ட அன்றைய **பிரிட்டீஷ் அரசும்** இதர மதத்தினரும்கூட தங்கள் சொத்துக்களையும் தொண்டு செய்ய **ஏராளமாக பண உதவி களையும்** இவர்களிடம் **தானமாக** வழங்கினர். ஐரோப்பிய நாடுகளில்உள்ள மற்ற அனைத்து நாடுகளில் உள்ளவர்களும் இந்த **சமூக நற்பணியில்** அவர்கள் **பங்களிப்பு** ஏற்கனவே இருந்தபடியால் இந்தியாவில் **சமூக தொண்டு** செய்துவந்த குழுக்களுக்கிடையில் **ஆராதனை வழிபாட்டு முறையில்மட்டும்** கண்ட வித்தியாசத்தால் இவர்களுக்குள் அவ்வப்போது **கருத்து வேறுபாடு** உண்டாயின என்று அறிந்தனர். மேலும் ஒரே சபை பெயரில் உள்ள ஒரே தலைமையின் கீழ் பணியாற்றும் நிலையில் இவர்களுக்குள் **கருத்தெற்றுமை உண்டாகமல்**போனது. ஆகவே (திருநெல்வேலி டையோசிசன் டிரஸ்ட் அசோசியேசன்) TDTA, SBG, CMS, LMS, SIUC, Travancore Trust (திருவிதாங்கூர் தொண்டு நிறுவனம்) என அநேக நிறுவனங்கள் தனிதனியே தொடங்கப்பட்டு இயங்கின.

**திருநெல்வேலி டையோசிஸ்** TDTA 1919ம் ஆண்டு அன்றைய **பிரிட்டிஷ் அரசின்** முறைப்படி கம்பெனி சட்டப்படி பதிவு செய்யப்பட்டு அதன் பல்வேறு வகையான சமூக பணிகளைச் செய்ய பாடசாலைகள்,**மருத்துவமனைகள்,விவசாயம்,சிறியரக தொழிற் சாலைகள்** போன்ற பலவற்றை நிறுவி **சபை ஆராதனையுடன்** சமூக தொண்டையும் இணைந்து செய்து வந்தது. இதைப்போல அன்று இந்தியாவில் இருந்த பல **நூறு சிறுசிறு டிரஸ்ட் தொண்டு** நிறுவனங்களும் தங்கள் நாட்டு முறைப்படி தங்கள் சிஸ்டம்போல் தொண்டுகளையும் ஆராதனையும் நடத்தி வந்தனர். அந்த குறிப்பிட்ட காலங்களில் **திடீர்** என்று ஏற்பட்ட சில அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் ஐரோப்பிய மிஷனரிகள் உடனே இந்தியாவைவிட்டு வெளியேறவேண்டும் என்று அரசாங்க நிர்பந்தத்தால் சில ஐரோப்பிய நாடுகளிலுள்ள நிறுவனங்கள் இந்தியாவில செய்துவந்த தங்கள் பணியை குறைத்து **தாய் நாட்டுக்கு நிரந்தரமாக குடியேற வேண்டி** அவரவர்கள் பொறுப்பில் இருந்த அனைத்து தொண்டு நிறுவனங்களையும் **ஒன்றாக இணைக்க** ஆசைப்பட்டனர்.

LMS,SBG போன்றவர்கள் SIUC என்ற பெயரில் ஏற்கனவே இணைந்து செயல்பட்டுக் கொண்டிருந்தது. **தென் இந்தியாவில்** உள்ள பல்வேறு **தொண்டு நிறுவனங்களையும்** ஒன்றாக்கி இணைத்து நடத்தும் எண்ணம் கொண்ட ஒரு குறிப்பிட்ட அமைப்பிடம் தங்கள் பொருப்பில் உள்ள **சமூக பணியை** ஒப்படைத்தனர். அந்த குறிப்பிட்ட அமைப்பு தொடர்ந்து அரசாங்க சட்டப்படி செயல்பட 1939ம் வருடம் **செங்கல்பட்டு பதிவு அலுவலகத்தில் (ரிஜிஸ்டர் ஆபீஸில்)** வைத்து ஒரு ஒப்பந்தம் செய்து அரசாங்க பதிவும் செய்து அந்த அமைப்பிடம் ஒப்படைத்துவிட்டு அன்றைய அரசாங்கத்தால் ஐரோப்பியர் **தங்களின் தாயகம்** செல்ல கட்டாயப்படுத்தப்பட்டனர். அதன் பிறகும் மற்ற அமைப்புகள் இவர்களோடு **இணைவதில் ஏற்பட்ட சில சிக்கல்களால்** அனைத்து **குழுக்கள், சபைகள்** ஆகியவற்றின் இணைப்பு முயற்சிகள் ஏனோ தாமதம் ஆகியது.

1947ல் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்த அமைப்பினர் **அன்றைய சுதந்திர இந்திய அரசாங்கத்தின் புதிய சட்டப்படி ஒரு புதிய பதிவுடன்** ஒன்றாக இணைய முடிவு செய்து பிரிட்டிஷ் காலத்து இந்திய அரசின் ஆட்சியின் ஒப்பந்தத்தை மாற்றி அப்போது இந்தியாவில் சுதந்திரம் அடைந்தபின் இயற்றிய **இந்திய அரசியல் அமைப்பு** சட்டத்தின்படி ஒரு **புதிய அமைப்பை** ஏற்படுத்தி அதற்கென சட்டம்(Constitution) இயற்றி தொடர்ந்து மக்கள் அதன் பயனை பெற 1913 **கம்பெனி சட்டத்தில்** கீழ் பதிவு செய்ய வெவ்வேறு சபைகளும் அமைப்புகளும் ஒன்றாக இணைய தீர்மானித்தது. 1947 ம் வருடம் செப்டம்பர் மாதம் 26ம்ட தேதி (112/1947) CSITA என்ற **புதிய அமைப்பு முறையாக** சட்டப்படி உதயமானது.

ஏற்கனவே ஒத்துக்கொண்ட ஒப்பந்தத்தின்படி இதர அமைப்புகள் யாவும் தங்கள் அனைத்து **சமூக தொடர்பு பணிகளையும், சொத்துக்களையும், சபைகளையும்** CSITA Companyயில் இணைக்கும் என எதிர்பார்த்த முறையில் இணைக்கப்பட்ட தாமதமானதால்(TDTA திருநெல்வேலி டையோசிஸ்) இன்று வரை CSITA Companyல் தன்னை முழுவதுமாக **இணைத்துக்கொள்ளவில்லை.** ஆனால் CMS 1956ல் தன்னை முழுமையாக CSITA வுடன் இணைத்துக்கொண்டது. அதுபோல பல நூறு சிறு சிறு சபைகளுடன் தொண்டுகளை் செய்து வந்த **குழுக்கள் தங்கள் சபைகளையும்,** நிறுவனங்களையும் நடத்திய வெளிநாட்டவர் CSITA வில் முற்றிலும் இணைத்துகொடுத்துவிட்டு **அரசாங்க நெருக்கடி** கொடுத்ததால் அவர்கள்

தங்கள் தாயகம் திரும்ப வேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர். பல ஆயிரம் **தனியார் ஸ்தாபனங்கள்கூட** தங்கள் சொந்த சொத்துக்களை (CSITA Company யினள் பெயரில் மக்களுக்கு சமூக தொண்டு செய்ய விரும்பி CSITA கம்பெனியிடம் தங்கள் சொத்துக்களை நன்கொடையாக முழுவதுமாக கொடுத்துவிட்டனர். அந்த நட்களில் சென்னையில்மட்டும் ஒரு கத்தோலிக்க **கிறிஸ்தவ இயக்கம். வெள்ளைக்கார பாதிரிமார்கள்** இந்தியாவைவிட்டு போகவேண்டி அரசாங்கத்தால் கடுமையாக கட்டாயப்படுத்தப்பட்டபடியால் தங்களின் **243 சொத்துக்களையும்** கத்தோலிக்க - சிஎஸ்ஐ உபதேச வித்தியாசம் பாராமல் மக்களின் நன்மைக்கென்று அப்படியே CSITA Companyயிடம் முழுமையாக ஒப்படைத்து தாங்கள் **கத்தோலிக்க சபை** பெயரில் செய்து வந்த அந்த **சமூக தொண்டை** தொடர்ந்து செய்ய வேண்டும் என்று CSITA வை பணித்தது (கேட்டுக்கொண்டது).

= CSITA **கம்பெனியின்** மூல விதிகளின்படி அதன் **வருமானத்தை** யாரும் யாருக்கும் பகிர்தளிக்ககூடாதபடி அதன் **பலனை பயனாளிகளுடைய** ஆலோசனையின்படி நலிவுற்ற **ஏழைகளை** சென்றடைய வேண்டும் என்பதுடன் அதற்காக **எந்த கட்டணமும்** (சர்வீஸ் சார்ஜ்) யாரிடமும் வசூலிக்கப்படகூடாது என்பது CSITA வின் நோக்கமும் **மூல சட்டமுமாகும்.**

CSITA வின் அனைத்துவித பணியாளர்களையும் **(பேராயர்கள் உட்பட) பணியமர்த்துதல்.** சம்பளம் வழங்குவது ஓய்வூதிய பலன் வழங்குதல் என அனைத்தும் CSITA Company தான் செய்ய வேண்டும் என அதன் விதி **3d மற்றும் eல்** கூறபட்டள்ளது. அதுபோல அதன் **நிர்வாகிகள்** எந்த ஊதியமும் இதிலிருந்து பெறக்கூடாது என்று அதன் **மூலவிதி4ல்** தெளிவாக கூறப்பட்டுள்ளது. அந்த **சட்டவிதியைமீறி நிர்வாகிகள்** யாராவது ஊதியம் பெறும்பட்சத்தில் அவர்கள் முழுமையாக **தண்டிக்கப்படவேண்டும்** என அதன் **விதி 6ல் தெளிவாக** கூறப்பட்டுள்ளது.

சுதந்திரம் அடைந்த புதிய இந்திய அரசும் CSITAவின் முழு **வருமானத்திற்கும்** (12A) மற்றும் 80Gன்படி **வருமானவரி விலக்கும்** வழங்கியுள்ளது. அதாவது CSITA Company க்கு அல்லது சபைக்கு நன்கொடை, காணிக்கை, உறுப்பினர் சந்தா (Subcription) கொடுப்பவர்கள் அதன் **ரசீதை** தாங்கள் வருமான வரி செலுத்தும்போது சமர்பித்தால் அவர்களுக்கும் **வரிவிலக்கு** கிடைக்கும். அதுபோல் கம்பெனியின் சபையின் **வருமானத்திற்கும் முழுமையான வரி விலக்கும்** அரசாங்கம் வழங்கியுள்ளது. ஏனெனில் CSITA Company **தொண்டு செய்தல்** என்பதை தங்கள் பிரதானமான நோக்கமாகவே கொண்டிருந்தது. மற்றும் அது **பதிவுசெய்யப்பட்ட** சட்ட திட்டத்தின்படியும், அது சார்ந்த **கம்பெனிசட்டபடி** மாத்திரமே சபை இயங்க வேண்டும். அத்துடன் மேற்படி விதிகளின்படி ஆரம்பிக்கப்பட்ட எந்த நிறுவனமும் அதன் **மூல சட்டதிட்டங்களை** மாற்ற விரும்பினால் அரசினுடைய முன் **அனுமதிபெறவேண்டும்** என்பதும் அரசு சட்டங்கள் கூறுகிறது. (Section 8 Company Act).

## CSI உதயம்

அந்த காலத்தில் பற்பல **தொழுகை முறைகளில்** இயங்கிவந்த இயக்கங்களுக்கும் சபைகளுக்கும் **ஒரே மாதிரி ஆராதனை, தொழுகை முறை** தேவைப்பட்டதால் CSITA முறைப்படி உருவான அடுத்த நாள் CSITA 27/9/1947 அன்று சனிக்கிழமை 5 பிஷப்கள் **காவி உடையில்** பல சபை பிரிவுகளான **மெதடிஸ்ட்,ஆங்கிலிக்கன்,காங்கிரிகேசனல்,பிரிஸ்பிட்**

**டேரியன்** ஆகிய சபைகளை சேர்ந்தவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து முதல் முறையாக ஒரே மாதிரியான (லிட்டர்ஜி உபயோகித்து அந்த) **ஆராதனை முறையில்** ஒன்றாக இணைந்து **ஒரே மாதிரியான தொழுகை** செய்தனர். அதாவது CSITA மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் சபையினர் ஒன்றாக சேர்ந்து ஒரே மாதிரியான தொழுகை செய்தனர். அதன் மூலம் **ஆராதனை செய்யும் சபையாக** CSI உருவானது. CSITA உருவானபோது **CSI என்ற பெயரில் எந்த சபையும்** அந்த காலங்களில் இல்லை. CSITA தன் பயனாளிகளுக்காக அவர்கள் **அறியாமையை போக்க** அவர்களின் மூடபக்தி பயத்திலிருந்து விடுபட அவர்களின் சபை **ஆராதனைக்காக CSIயை தோற்றுவித்தது அவ்வளவே!.** அதன் பின்னர் மேலை நாட்டு மிஷனரிகள் பல்வேறு நிலைகளில் இந்தியாவிலிருந்த தங்கள் **சொத்துக்களை** CSITA பெயருக்கு மாற்றினர்.

## CSI சபைக்கு சொத்துக்கள் உண்டா ?

**CSI சபைக்கு சொத்துக்கள் இல்லை.** CSITA தோன்றுவதற்கு முன்பும் இல்லை, பின்பும் இல்லை. சொத்துக்களை கொடுத்தவர்கள் யாரும் **CSI சினாட்**தான் அதனை கட்டுபடுத்த வேண்டும் என எந்த **உடன்படிக்கையையும்** ஒப்பந்தமும் செய்யவும் இல்லை. Trust ஒப்பந்தத்தில் அவைகளைப்பற்றி எதுவும் எழுதப்படவுமில்லை. அதுபோல CSITA வுக்கும் CSI சபைக்கும எந்த **உடன்படிக்கையும்** இல்லை. ஏனெனில் CSITA **Company யின் சபை** அல்லது **சுவிசேஷ துறைதான்** CSI சபை என்பது ஆகும். CSITA பதிவு செய்யப்பட்டதும் அனைத்து **கல்வி நிறுவனங்கள்** விவசாய நிலங்கள் **மருத்துமனைகள்** இதர நிறுவனங்கள் அனைத்தும் CSITAவின் **கட்டுபாட்டில்** கொண்டுவரப்பட்டு அதன் முக்கிய நோக்கமான **எளியோருக்கும், நோயாளிகளுக்கும்** இன்னும் மற்ற ஒதுக்கப்பட்டவர்களின் **சமூக பணிகளுக்காக** அப்படிப்பட்ட மக்களுக்கு உதவ ஒப்படைக்கப்பட்டது ஆகும்.

CSITAஅதன் பயனியாளிகளுக்கு **இலவசமாக** (சில்லரை செலவு தவிர்தது) சேவைசெய்து வந்தது. ஆராதனை **காணிக்கை, நன்கொடை** மற்றும் CSITA சார்ந்த ஸ்தாபனங்களின் நிறுவனங்களின் **வருமானம்** போன்றவற்றை பயனாளிகளின் **துயர்துடைக்க** பயன்டுத்தியது. இதற்காகவே இந்திய அரசால் **வருமானவரி சலுகையும்** Income Tax Act 12A பெற்றது. **போதகர்களை** பணியமர்த்துவதும் **அவர்களின் ஓய்வு ஊதிய பலன்கள்** யாவும் CSITA தான் **நிறுவகிக்க வேண்டும்.**

### சினாட் என்றால் என்ன ?

பல்வேறு தொண்டு நிறுவனங்கள் **சபை ஆலயங்கள்** யாவும் அன்று தனி தனியே இயங்கிய நிலையில் **வருடம் ஒருமுறை** ஒன்றாக சேர்ந்து பணி அனுபவங்களை **பகிர்ந்துகொள்ள, ஒரு**

**குறிப்பிட்ட இடத்தில்** அவர்கள் யாவரும் ஒன்றுகூட அதற்கு **தலைமை தாங்கும் பணியை** CSITA தான் நிர்வகிக்க வேண்டும்.

## சினாட் என்றால் என்ன ?

பல்வேறு தொண்டு நிறுவனங்கள் **சபை ஆலயங்கள்** யாவும் அன்று தனித்தனியே இயங்கிய நிலையில் **வருடம் ஒரு முறை** ஒன்றாக சேர்ந்து மேலே குறிப்பிட்டதுபோல பணி அனுபவங்களை பகிர்ந்துக் கொள்ள நிறுவனங்கள்,சபைகள் நடத்துபவர்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடவும் அதற்கு **தலைமை தாங்க** ஒருவரும், அன்றைய **கணக்கு வழக்கு** பதிவு செய்ய ஒருவரும், அந்த கூட்டங்களை **ஒழுங்குபடுத்த** ஒரு வருவரும் தேவைப்பட்டனர். அவர்தான் Ex-officer Chairman என்ற பெயரில் அழைக்கப்படுவதைத்தான் **மாடரேட்டர்** என்ற பெயரில் அப்போதே அழைக்கப்பட்டார். **இந்த மாடரேட்டருக்கு எந்த அதிகாரமும் கிடையாது.** ஆதாவது **கல்யாண வீட்டில்** ஊரில் உள்ள **ஒரு முதியவரை** நடுவில் அமரவைத்து கல்யாண சடங்கு காரியங்களை செய்து வந்ததுபோல் மாடரேட்டர் என்பவர் தலைமை தாங்கிறார். அவ்வளவே! அன்று இப்படிப்பட்ட கூடுகையில் **பல்வேறு நாடுகளை** சேந்ர்தவர்களும் கலந்துகொண்டனர். அதன்படி தான் **இலங்கை டையோசிஸசும்**˙ TDTA **திருநெல்வேலி டையோசிஸ் டிரஸ்ட் அசோசியேசன்** போன்றோர் சினாட்டில் கலந்துகொண்டனர்.

Synod is the conference / Congress of Synod is part of CSI or CSITA ? The Evangilical Department of different trusts which are doing charity and Evangelism. **The Moderator** who is elected by the Synod is the **Ex Offisio Chirman** to conduct the Synod / Evangelical Conference. two or three days the evangelical department of different trusts joining together and electing a person to be chair the conference or Synod. It has **no bank account.** Only for the meeting they are **Eecting the Chairman** and **Secretary** ane **Treasurer,** They will act as a Ex officios.

They will Convince the next Conference/Congress/Synod. The new Chairman/Secretary and Treasurer will continue the conference. Because the participants from different trusts will give the money for the Synod. after the conference their function are as earlier . (for details, please read the conference note) The Expense shall be **met by the participants** like. so the **Moderator** can not appoint **Bishop** or any salaried employees. Since Synod is the conference if the Evangelical Department of differetnt Trusts. SYNOD is the part of CSI.

**மாடரேட்டருக்கோ** சினாட்டுக்கோ **தனி சேமிப்பு** எதுவும் (இருக்கக்கூடாது) **வங்கி கணக்கும்** கூட கிடையாது.

ஆனால் இப்போது உள்ள CSI சபை பிஷப்மார்கள் மாடரேட்டர் CSITAவின் சபை ஆராதனை அங்கத்தினர்கள் அனைவரையும் ஏமாற்றிக்கொண்டு **கள்ளத்தனமாகவே** CSI சபை மக்கள் யாருக்கும் விவரங்களை தெரிவிக்காமல் இவர்களாகவே **ஒரு சட்டம் இயற்றி கணக்குபோட்டு, சொத்துக்களை விற்பனை** செய்ய வேண்டி CSITA Company என்ற **ஒன்று உள்ளதாக சபை மக்களுக்கு காண்பிக்காமல்** அவர்களுக்கு **அறிவிக்காமல்** CSITAவின் சொத்துக்கள் சட்ட விரோதமாக பல்வேறு இடங்களில் விற்பனை செய்யப்படுகிறது. அதற்காக **இல்லாத ஒன்றான(சினாட்)** என்று ஒன்று இருப்பதாக CSI சபை மக்களுக்கு காண்பித்து **வேடம் போட்டு** வந்ததால், **சபை மக்களின் காணிக்கைகளை, சொத்துக்களை** சூறையாடி மிரட்டியும், மேலும் இவர்கள் அரசையும் **ஏமாற்றி வந்ததால்** இப்போது CSITA, CSI சபைகளின் தலைமை SFIO(Serioud Fraud Investigation Office- Under Ministry of Corporation Affairs) துறையிடம் வசமாக கடும் இன்னலில் மாட்டி கொண்டுள்ளது என்று அறியப்படுகிறது.

இப்போது **CSI சினாட் நிர்வாகிகளின்** தவறான ஏமாற்றுதனத்தால் நாம் செலுத்தும் **காணிக்கை பணத்துக்கு** வருமான **வரி விலக்கு நீங்கி** காணிக்கை பணததுக்கு 30 சதவீதம் (100 ரூபாய்க்கு 30 ரூபாய் வரி) **வரி கட்ட வேண்டியநிலை** ஏற்பட்டுவிட்டது. இது அல்லாது நம் CSI சபைகளுக்கு மேலும் **பல ஆபத்துக்களும்** அரசங்கத்தால் ஏற்படபோகிறது.

அதோடு மட்டுமல்லாது சுனாமியில் பாதிக்கப்பட்டவவர்களுக்கு அமெரிக்க உதவி ஸ்தாபனம் அனுப்பிய பல நூறு கோடிகளை ஊழல் செய்த முன்னாள் மாடரேட்டர் சினாட் செயலர், பொருளாலர் இவர்கள் யாவரும் விசாரனைக்கு உட்படுவர். முன்பே இவர்கள் ஜெயில் தண்டனை அனுபவித்திருந்தாலும் இன்னும் அந்த பண பிரச்சனை வழக்குகள் இப்போது பெரும் பணத்தால் அமுக்கிவைக்கப்பட்டுள்ளது. அதை மீண்டும் SFIO(Serious Fraud Investigation Office- Under Ministry of Corporation Affairs) துறையினர் தோன்டி எடுக்கப்போகிறார்கள். காரணம் இன்று வரை அதன் செலவு கணக்கை முழுவதுமாக சமர்பிக்கப்படவில்லை.

அதை குறித்து அமெரிக்க ஸ்தாபனம் டெல்லி மத்திய அரசுக்கு புகார் அனுப்பியுள்ளது. கடலே(SEA) இல்லாத டையோஸ்ஸில் உள்ள பிஷப்மார் தங்களுக்கும் சுனாமி பணத்தில் பங்கு வேண்டும் என்று வாங்கி போனார்கள். இதை குறித்து அமெரிக்க ஸ்தாபனம் அனுப்பிய கணக்கு விவரத்தை அப்படி போட்டோ காப்பி எடுத்து ஜாமக்காரனில் வெளியிட்டதை வாசகர்கள் வாசித்திருப்பீர்கள். அதை ஜாமக்காரனில் வெளியிட்டதால் இன்றைய மாடரேட்டர் என்மேல் மிகவும் வெறுப்பும், கோபமும் கொண்டுள்ளார். கோட்டயம் டையோசிஸ் எங்கு என் கூட்டம் நடந்தாலும் ஆயர்கள் அந்த கூட்டத்துக்கு பிஷப் அவர்களை தலைமை தாங்க அழைப்பு கொடுத்தாலும் **பிஷப் அவர்கள் என் கூட்டத்துக்கு தலைமை தாங்க வருவதில்லை.**

இப்படிப்பட்டவர்களுக்கு உண்மைகள் கசக்கிறது விமர்சனங்களை தாங்கமுடியாதவர்களாக குற்றஉணர்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றாலும் அறிவிக்கும் எச்சரிக்கும் என் பணியை நான் ஓரளவு நிறைவேற்றிவிட்டேன் என்ற மனநிறைவு எனக்குண்டு.

ஆகவே இப்போதுள்ள CSIயில் சந்தா (Subscription) சங்கம் அல்லது மாதவரி கொடுக்கும் CSI அங்கத்தினர்களான நாம் யாவரும்தான் CSITAவின் **உண்மையான** பயனாளிகள் ஆகும். ஆகவே சிஎஸ்ஐ அங்கங்களான நாம் அனைவரும் விழிப்படைந்து **சபை தலைவர்கள்** என்ற பெயரில் இதுவரை விற்பனை செய்த நம் CSI **சபை சொத்துக்களை** மீட்டெடுக்க நாம் ஒன்று சேரவேண்டிய சூழ்நிலை இப்போது உருவாகியுள்ளது. இந்த **அவசரமான** அதே சமயம் ஆபத்தான இந்த சூழ்நிலையிலதான் CSI சபை மக்களாகிய நாம் இருக்கிறோம். **இதுதான் இன்றைய CSI சபைகளின் நிலை.**

## எச்சரிக்கை

வங்கிகள், அரசு துறைகளில் நம் **CSI நிறுவனங்கள் CSITA என்ற பதிவு அடிப்படையில்** அரசாங்க பதிவு செய்யப்படடியால் அனைத்து அரசு நிறுவனங்களுக்கும் Notice அனுப்பி நம் **கவர்மெண்ட்** நம் **CSI சபைகளை** CSITA **சட்டத்தின்படி** நடத்தும்படி **அறிவுரை** கூறவேண்டும். அப்படி செயல்பட CSI தலைவர்கள் தவறும் பட்சத்தில் CSIயில் பொருப்பிலுள்ள அவரவர்கள் மீது **குற்ற வழக்கு பதிவு** செய்யப்படவேண்டும என்று CSI சபைகளின் மீது உண்மையான பாரம் அக்கரை உள்ளவர்கள் சிஎஸ்ஐ கிறிஸ்தவ சட்ட ஆலோசகர்கள் ஜாமக்காரன் வாசிக்கிற CSI மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஏதாதவது **அரசு துறைகள்** அல்லது **வங்கிகள்** சட்டப்படியான CSITAவுக்கு பதில் **அரசு அங்கீகாரம்** இல்லாத CSI சபை பெயரில் **கூட்டு குற்றம்** புரிந்ததால் CSITA **சபைகள் கம்பெனியின் சட்டத்தின்படி** சபை செயல்படாமல் **கூட்டு குற்றம் புரிந்து** அரசையும் CSITA **நிறுவனங்களையும்** பொருப்பாளர்கள் ஏமாற்றி நம் டையோசிஸ்களில் பலர் **குற்றசெயல்** புரிந்ததால்தான் இப்போது நம் SFIO என்ற புலனாய்வு துறைகள் ஊழல் ஒழிப்பு துறைகள் யாவும் இன்று CSI சபைகள் முழுவதிலும் விசாரணை நடத்தி வருகிறது. இந்த தருணத்தில் சம்பந்தப்பட்ட **குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு** தண்டனை பெறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

**ஜாமக்காரன்:** 24 CSI சபைகளின் டையோசிஸ் பிஷப்மார்களும் ஆயர்களும். சினாட் நீரவாகிகளும்,மாடரேட்டர் தயவுசெய்து என்மேல் கோபப்படாமல் என் எழுத்தின் நோக்கத்தை புரிந்தக்கொள்ளுங்கள்.

நானும் என் குடும்பமும் CSI சபையில் பிறந்து வளர்ந்தவர்கள் நான் CSI சபைகளுக்கு

எதிரானவன் அல்ல. என் தகப்பனார் 30 வருடங்கள் தொடர்ந்து சபை மக்களின் முழு ஒப்புதலோடு CSI சபை செயலாளராக ஊழியம் செய்தவர். என் மாமனார் CSI சபையின் ஆயராக பணியாற்றி ஞாயிறு ஆராதனை நடத்தி ஆசீர்வாதம் கூறியவுடன் ஊழியத்திலேயே மரித்தவர். நாங்கள் குடும்பமாக CSI சபையில் எங்கள் தாலந்துக்கு ஏற்றபடி தொடர்ந்து ஊழியம் செய்துகொண்டுவருகிறோம். என் 77 வயதில் கடந்த 52 வருடமாக இன்று வரை தொடர்ந்து CSIயிலும் CNIயிலும் நான் ஊழியம் செய்ய அழைக்கப்படும் சபையில் காணிக்கை சேகரிக்காமல், என் ஜாமக்காரன் பத்திரிக்கையிலும். நான் வாசகர் யாரிடமும் பணம் கேட்காமல் என் வாசகர்களே காணிக்கைகளை அனுப்பி ஜாமக்காரன் பத்திரிக்கை நடத்தப்படுவதால் காணிக்கை சேகரிக்க வேண்டி நான் எந்த வெளி நாட்டுக்கும் சென்றதில்லை.

உள்நாட்டிலும். வெளி நாட்டில் 162 தேசங்களிலும் நடத்திய கன்வெண்ஷனுக்கு பணம் கேட்காத ஒரே ஊழியன் நான்தான் என்ற நற்பெயர் கொண்டவன்நான். என் பிள்ளைகள் இருவரும் நல்ல நிலையில் உயர் பதவியிலும், **ஊழியத்தில் உயர் நிலையிலும்** கர்த்தரின் ஆசீவாதத்தோடு வாழ்கிறார்கள். ஆகவே என் பிள்ளைகள் குடும்பத்துக்கும் என் பண உதவி அவர்களுக்கு தேவையில்லை. அவர்கள் உதவியும் எனக்கும் தேவையில்லை. என் மனைவியின் அரசாங்க ஆஸ்பத்திரி பணியில் கிடைக்கும் ஓய்வு ஊதிய பணம் எனக்கும் என் மனைவிக்கும் போதுமானது. எனக்கு எங்கும் கடன் என்பது கிடையாது. அச்சகத்திலோ, பேப்பர் கம்பெனியிலோ இதுவரை நான் பண பாக்கி வைத்ததில்லை. என்கென்று சொந்த ஸ்தாபனம் இல்லை. சொந்தமாக சபையோ,ஆலயமோ இல்லை. சேலம் ஜங்ஷனில் உள்ள சிஎஸ்ஐ சபையில் 77 ஆண்டுகளாக சாதாரண அங்கத்தினனாக இருக்கிறேன். அழைக்கும் இடத்தில் கன்வென்ஷனில் பிரசங்கித்து வருகிறேன். மாதம் ஒரு வாரம் ஆதிவாசிகள் இடையே இலவச வைத்தியமும்,சுவிசேஷ ஊழியமும் நிறைவேற்றுகிறேன். அவ்வளவே! ஆகவே எனக்கு பண தேவையும் இல்லை.

இப்படி கர்த்தரின் கிருபையால் என் குடும்பம் முழுவதும் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் நடந்து வருகிறது. மேலே எழுதிய CSIயின் பிரச்சனைகளை நான் ஜாமக்காரனில் சுட்டிக்காட்டி எழுதுவதால் எனக்கு எந்த ஆதாயமும். பெருமையும் இல்லை. மனவேதனையுடனும், ஆதங்கத்துடனும் இதைத்தான் எழுதுகிறேன். இப்படி நான் எழுதுவதால் CSIயில் என் ஊழயத்துக்கு இப்போது திறக்கப்பட்ட வாசல்கள்கூட அடைபடும் என்பதை நான் நன்றாகவே அறிவேன்.

CSI **சபைகளுக்கு மறைக்கப்பட்ட இந்த இரகசியங்களின்** ஆதாரங்களை தேடி எத்தனையோ மைல்கள் பிரயானம செய்தேன். எனக்கு அறிமுகமில்லா நபர்கள் CSI சட்டங்களை அறிந்த சரித்திர போராசியர்களை சந்தித்தேன். கிறிஸ்தவ சட்ட ஆலோசகர்கள் பலர் என்னை வெகுவாக உற்சாகப்படுத்தினர். ஓய்வுபெற்ற CSI பிஷப்மார் சிலரை அவர்கள் மரிப்பதற்கு முன்பே அவர்கள் வியாதி படுக்கையில் இருக்கும்போதே அவர்களின் வீடுதேடி சென்று கட்டில் அருகே அமர்ந்து சிஎஸ்ஐ சட்டதிட்டங்களைப்பற்றி விசாரித்து குறிப்புகளை எடுத்துக்கொண்டேன். கடந்த குறுகிய காலங்களில் ஓய்வுபெற்ற ஒரு பிஷப்பையும் நேரில் சந்தித்தேன். இதற்காக சினாட் பழைய அங்கத்தினர்,ஆயர்கள் அவர்கள் வேதாகம கல்லூரியில் சபைப்பற்றி திசஸ் எழுதியவர்கள் இப்படிப்பட்டவர்கள் தேடி ஆந்திரா, கேரளா, கர்னாடகா, ஆகிய மாநிலங்களுக்கு சென்றேன்.

பலர் என்னிடம்பேசவே பயந்தனர். சிலர் என் மொபைல் கேட்டனர். அவர்கள் அறியாமல் அவர்களைபேசுவதை நான் பதிவு செய்துவிடுவேனோ என்ற பயத்தில் அப்படி கேட்டார்கள். அப்போது நான் சொன்னேன். மொபைல் கையில் வைக்காத ஒரே ஊழியன் நான்தான் என்று என்னை பரிசோதிக்கும்படி கேட்டுக்கொண்டேன். அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு பல விஷயங்களை தையரிமாக என்னிடம் பகிர்ந்துகொண்டார்கள். பதவியில் அவர்கள் இருந்தபோது இதே தவறை அறிந்தும் செய்தவர்கள் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனர்.

மேலே CSI சபைகளுக்கு மறைக்கப்பட்ட இரகசியங்களைப்பற்றி எனக்கு தகவல் அளித்தவர்கள் யாரும் வேரு சபையை சேர்ந்தவர்களோ, பெந்தேகோஸ்தே சபைக்கு CSI யிலிருந்து பிரிந்துபோனவர்களோ அல்ல. நான் சந்தித்த அத்தனைபேரும் இப்போதும் CSI சபையின் உண்மையான அங்கத்தினர்கள் ஆகும். உண்மையான விசுவாசிகளுமாகும். அதே போல் என்னைவிட CSI சபைகளின்மேல் கூடுதல் பாரம் உள்ளவர்களும் எனக்கு முன்பே CSI சபைகளின் பிரச்சனைகளை சின்ன துண்டு பிரதிகளில் வெளியிட்டவர்களாகும்.

CSI உண்மை சரித்திரங்களை அதன் ஆதாரங்களையும் எனக்கு கொடுத்து உதவின நபர்கள் கேரளத்தில் கோட்டயம். திருவல்லா, ஆந்திராவில் மேடக் டையோசிஸ்ஸில் உள்ள ஒருவரும் தமிழ்நாட்டில் திருநெல்வேலி,கன்னியாகுமரி டையோசிஸிஸ் குறிப்பாக நாகர்கோவில் Dr.சுந்தரராஜன் மற்றும் இதைகுறித்து சரித்திர ஆராய்ச்சி செய்த பேராசிரியர். (பெயர் குறிப்பிட அவர் விரும்பவில்லை) லைப்ரரினாக பணிபுரிந்த நபர் இவர்களுக்கும் மேலே குறிப்பிட்டவர்களும் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். அநேக வருடங்களுக்கும் முதன்முதல் செங்கல்பட்டு ரிஜிஸ்டர் ஆபீஸில் அன்று பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்த நகல்களை பல ஆயிரங்கள் கொடுத்து ஆதாரத்துக்காக வாங்கி வைத்ததை எனக்கு காட்டினார்.

இந்த 2017 நவம்பர் மாத ஜாமக்காரன் (தமிழ் & மலையாளம்) வாசித்த பல CSI **பிஷப்மார்களும் (பழைய - புதிய) மாடரேட்டர்களுக்கும்** ஒரு சில ஆயர்களும் நிச்சயம் என்மேல் பெரும் எரிச்சல் கொள்வார்கள் என்பது நிச்சயம். இவர்களால் என் ஊழியத்துக்கு எந்த விதத்தில் தடைகள் உண்டாகும் என்பதையும் கற்பனையில் சிந்தித்து எதிர்பார்த்துதான் ஜெபித்து ஆவியானவரின் துணையோடு இதை எழுதுகிறேன்.

**குறிப்பு:** நான் எழுதிய விவரங்களில் தவறு உண்டானால் தயவுசெய்து அதை சுட்டிக்காட்டி எனக்கு எழுதினால் என்னை நான் திருத்திக்கொள்வதற்கும் மன்னிப்பும் கேட்டுக்கொள்ளவும் தயாராக இருக்கிறேன்.

**விமர்சனம்:** இதைக்குறித்த விமர்சனங்களை எதிர்ப்பார்க்கிறேன். சிஎஸ்ஐ சபை அல்லாதவர்கள் விமர்சனமோ, ஆலோசனையோ எழுதவேண்டாம்.

கடைசியாக இப்போதுள்ள சிஎஸ்ஐயின் ஆபத்தான இந்த சூழ்நிலையில் கோர்ட்டை நோக்கி போகாமல் அனைத்து **சிஎஸ்ஐ பிஷப்மார்** தனியாக ஈகோ பாராமல் கூடி ஜெபியுங்கள். **ஆயர்கள்** தனித்தனியாக கூடி ஜெபியுங்கள். நம் சபையின் சாட்சி கெட்டு இயேசுவின் நாமம் தூஷிக்கப்பட்டுவிடக்கூடாது. ஜெபிக்கிறேன் - ஜெபியுங்கள்.

**டாக்டர்.புஷ்பராஜ், சேலம் 636 005.**

# தேவ தூதர்கள் மனுஷ குமார்த்திகளோடு உடலுறவு கொண்டார்களா?

- Dr. XAVIER *(Slected)*

ஆதி. 6:1,2 வசனங்களை வைத்து சிலர் **தேவக்குமாரர்** என்றால், **தேவ தூதர்கள்** என்று இவர்களாகவே விளக்கம் கொடுத்து, **தேவதூதர்கள்** மனுஷ **குமாரத்திகளோடு** உடலுறவு கொண்டார்கள் என்றும், அந்த வகையில் **தேவ தூதர்களுக்கு** பிறந்தவர்கள்தான் **இராட்சதர்** என்றும் பல ஆவிக்குறிய சபையார் விளக்கம் கொள்கின்றனர். பெந்தேகோஸ்தே சபை ஊழியர்கள் பெரிதாய் மதிக்கும் Dakes பைபிளும் அப்படித்தான் விளக்குகின்றது.

## முதலில் தேவதூதர்களைப்பற்றி நாம் அறிந்துக்கொள்ள வேண்டும்.

**தேவதூதர்கள்** ஆவியாயிருக்கிறார்கள் (சங்.104:4, எபி.1:14) **ஆவியாயிருக்கும்** தேவதூதர்கள் மனிதர்களைப்போல ஆண்பாலோ-பெண்பாலோ இல்லை. ஆனாலும் நாம் நம் தேவனை **ஆண்பாலிலேயே** அழைப்பதுபோல, **தூதர்களையும்** ஆண்பாலிலேயே அழைப்பது வேதத்தின் பழக்கமாகிவிட்டது. **தேவ தூதர்களுக்கு** மனிதர்களைப்போல கொள்வினையும், கொடுப்பனையும் இல்லை. (மாற்க். 12:25, மத். 22:30) அதாவது அவர்கள் **உடலுறவே** கொள்வது இல்லை. இது இயேசுகிறிஸ்து வெளிப்படுத்திய சத்தியம்.

**மனித வடிவில்** காட்சியளிக்கதக்கதான வல்லமை துாதர்களாகிய அவர்களுக்கு உண்டு. (ஆதி. 19:1, யாத். 3:2, எண். 22:20-31, நியா. 22:1) ஆனாலும் அவர்கள் **ஆவிகள்** ஆகும். வானத்திலிருந்து வந்த அப்பமாகிய நம் இயேசுவின் சரீரம் மரித்தபின் உயிர்த்தெழுந்து **மறுரூபமாகாது.** ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் சரீரம் நம்மைப்போன்ற **மண்ணான சரீரம்** அல்ல, அது பரலோக சரீரம் ஆகும். அவர் சிலுவையில் சிந்தியது பரிசுத்த **தேவரத்தம்** ஆகும். (அப். 20:28) இயேசு மரித்த விதமாகவே அதே **சரீரத்திலேயே** உயிர்த்து அனைவருக்கும் **காட்சி தந்தார்** என்பதை லூக் 24:37, 40:24 போன்ற வசனங்களை தியானித்தால் புரியும். அதனால்தான் அவரை வைத்த கல்லறையில் **அவர் சரீரம்** காணப்படாது, அவர் வஸ்திரம்மட்டும் அங்கு சுற்றிவைக்கப்பட்டதாக நாம் வேதத்தில் வாசிக்கிறோம். **மண்ணான** மனுஷனின் **மாம்சமும், இரத்தமும்** பரலோக இராஜ்ஜியத்திதை சுதந்தரிக்காது.(1 கொரி. 15:50)

ஆனால் இயேசு கிறிஸ்து மட்டுமே **அதே சரீரத்திலேயே** பரலோகம் போயிருக்கிறார். அதே **சரீரத்திலேயே** அவர் திரும்பி வரவும்போகிறார். அதனால்தான் அந்த சரீரத்தில்பட்ட

காயங்களின் தழும்பு இன்னும் அவரிடம் இருக்கிறது. மாறாக **ஆவியாயிருக்கும்** தேவ தூதர்கள் மனிதர்களைப்போல காட்சி கொடுத்தாலும் அது **மண்ணால் உண்டான மனித சரீரமாகாது.** இயேசுவைப்போல வானிலிருந்து வந்தது. இந்த தூதர்கள் ஸ்தீரியின் வயிற்றிலும் பிறப்பதில்லை. அப்படி பிறந்திருந்தாலாவது **மனுஷீகமும்** உண்டு என சொல்லாம். உலகிலே பலர் சொல்வது போல தூதர்களின் கால்கள் தரையில் பதிந்திருக்காதாம். இப்படியும் கூறுபவர்கள் உண்டு. லூக். 24:39,மத். 28:9ஐ தியானியுங்கள்.

**மண்ணால்** உண்டான **மனுஷ குமாரத்தியோடு** உடலுறவுகொள்ள வேண்டுமானால், அதே **போன்ற சரீரம் உள்ள ஒரு மனுஷன்** தேவை. **ஆவியையும்,** ஆத்மாவையும் உடைய மனுஷனை நோக்கி பலுகிபொருகி பூமியை நிறப்புங்கள். (ஆதி. 1:26-28) என்று தேவன் அதிகாரம் கொடுத்தார் **அவியாயிருப்பவர்கள்** உடலுறவு கொள்ளவும் முடியாது. ஒரு குழந்தையை **பிறப்பிக்கவும் முடியாது** என்பதால்தான் ஆதி 2:7 கர்த்தர் மண்ணினால் புறம்பான மனுஷ சரீரத்தை உருவாக்கி **உள்ளான மனுஷனை** (ஆவி, ஆத்துமாவை) அதற்குள் வைத்து அவர்களை பலுகிபெருக வைத்தார். மனிதனின் **படைப்பின் ரகசியமே இப்படியிருக்க, ஆவியாயிருக்கிற தேவ தூதர்கள்,மனிதரூபம் எடுத்தாலும், மண்ணாலான மனுஷியின் (ஒரு பெண்ணுடைய)உருவத்தோடு உடலுறவு கொள்ளமுடியுமா?**முடியாதே!. **ஆவியான தேவ தூதர்கள்** ஆண்பாலும் பெண்பாலும் இல்லாமல், கொள்வினை,கொடுப்பினைக்கும் **தகுதியில்லாத** நிலையில் இருக்கும்போது, எப்படி **தேவ தூதர்கள்** மனுஷகுமார்த்தியோடு உடலுறவு கொள்ளமுடியும்?.

சிந்தியுங்கள். பால்வகையே(Gender) இல்லாத தேவதூதர்களுக்கு, குழந்தையை **பிறப்பிக்கும் வித்து** (Sperms) உயிரணு - எப்படியிருக்கும்? அந்த உயிரணு வித்து கூட மண்ணான மனித **சரீரத்திலிருந்துதானே** உருவாக வேண்டும். அப்போதுதான் மண்ணான மனிதனை பிறப்பிக்க.. முடியும். எனவே **மனுஷ குமாரத்திகளோடு - தேவ தூதர்கள்** உடலுறவு கொள்ள முடியாது என்றும், **ஆணின் வித்து** தேவதூதர்களிடம் இல்லை என்பதால் அவர்களால் **மனித இனத்தை** பிறப்பிக்க முடியாது என்றும், பிறப்பிக்கும் அதிகாரம் **மனுஷனுக்கு மட்டுமே** தேவன் கொடுத்திருக்கிறார். (ஆதி. 1:28) என்றும் அறிகிறோம்.

- அப்படியானால் ஆதி. 6:1,2ல் சொல்லப்பட்ட **தேவகுமாரர்கள் யார்**? என்பது அடுத்த கேள்வி? **தேவ குமாரர்** என்றால் **தேவனுடைய பிள்ளைகள்** என்று பொருள். யோ. 1:12ன்படி **இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள்** எல்லாரும் **தேவனுடையபிள்ளைகள்** ஆவார்கள். ரோ.8:14ன்படி **தேவனுடைய வார்த்தையினாலே நடத்தப்படுபவர்கள்** தேவனுடைய புத்திரர்களாகும். இப்படியாய் அந்த நாட்களில் **தேவனுடைய பிள்ளைகளாய்** இருந்தவர்கள்

பெண்களின் அழகில் மயங்கி **அந்நிய பெண்களோடு** (யெகோவாவை ஆராதிக்காதவர்கள்) உடலுறவு கொண்டிருக்கிறார்கள். இந்த பெண்களைத்தான் **மனுஷ குமார்த்திகளென்று** சொல்லியிருப்பதால் இவர்கள் தேவனுக்குள் வராதவர்கள், இவர்கள் **தேவகுமாரத்திகள்** என்று சொல்ல தகுதியில்லாதவர்கள். **அந்நிய நுகத்தில்** இணைக்கப்படுவதை ஆதி முதல் தேவன் **திருமணத்திலும் ஊழியத்திலும்** வெறுக்கிற ஒன்று ஆகும்.(2 கொரி.6:14-17, யாத். 4:24-26).

ஞானி **சாலமோனிடம்** தேவன் கண்டிப்பான முறையில் உணர்த்தியதும் இதுதானே! (1 ராஜா 11) இந்த நிலை பழைய ஏற்பாட்டு காலத்திலும் இருந்ததால்தான் கர்த்தர் விசனப்பட்டார் ( ஆதி. 6:1-7) ஆதாமின் 2 மகன்களில் நல்லவன் ஆபேல் கொல்லப்பட்டான், காயீன் **கெட்டவன்,** ஆதாமுக்கு 135 வயதான போதுதான் **சேத்** பிறந்தான். (ஆதி. 5:3) சேத் வழியில்தான் **தேவ குமாரர்கள்** தெய்வத்துக்கு பயந்தவர்கள் வந்திருக்க வேண்டும்.

எனவே **சேத்** பிறந்து அவனுக்கு 105 வயதாகும்வரை (ஆதி. 15:5). **தேவ பிள்ளைகளே** இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆக இந்த கால கட்டத்தில்தான் **மனுஷ குமாரத்திகளோடு** உடலுறவு கொண்டவர்கள் **தேவ குமாரர்கள்தான்** என்று வாதிடுவோரும் உண்டு.

இவர்கள் அறிய வேண்டியது ஒன்று :- சேத்தின் வம்சாவழியல்தான் **இயேசு கிறிஸ்து** பிறந்தார் என்பதற்காகத்தான் **சேத்தின் பிறப்பு பற்றி** வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறதேயொழிய, அவன் வழியில் வந்தவர்கள் அத்தனை பேரும் **தேவ பிள்ளைகளாக** நிலைநிற்கவில்லை. நிலைமை இப்படியிருக்க **சேத்** பிறக்கும்வரை வாழ்ந்திருந்த கிட்டதட்ட 5 லட்சம் மனுஷர்களில் தேவனுடைய பிள்ளைகள் இருந்திருக்க வாய்ப்பேயில்லையா?வாய்ப்பு உண்டே! நாம் எல்லோருமே ஆதாமின் வம்சம்தானே! அந்த சந்ததியில் வந்தவர்கள் **தேவனுடைய பிள்ளைகள்தான் -**

அந்த **தேவ குமாரர்கள்தான் -** இப்படி **அன்னிய நுகப்பிணைப்பு** செய்திருக்கிறார்கள். மட்டுமல்ல.... ஆதி 6ம் அதிகாரம் ஆரம்பிக்கும்போது, ஆதாம் உயிரோடு இருந்திருக்கிறான். ஆதி 6:3ல் எழுதப்பட்ட **மனுஷனோடே** என்ற பதத்திற்கு **ஆதாமோடே** என்று **மூல பாஷையில்** உள்ளது. இந்த வசனத்துக்குபின் **ஆதாம்** வாழப்போகிறது 120 வருஷம்தான் என்று தேவன் சொல்வதால் அப்போது அவனுடைய வயது 810 இருந்திருக்கும் (930-120=810) .

ஆதாமின் இந்த 810வது வயதில்தான் **தேவ குமாரர்கள் மனுஷகுமாரத்திகளோடு** உடலுறவு கொள்வது நடந்திருக்கிறது என்பதால், சேத்துக்கு மகன் பிறக்கும்போது ஆதாம் வயது 240 (135+105) ஆனதை வைத்து ஆதாமின் 810-240 = 570 வருத்திலிருந்து சேத் வழியாகவும் தேவ பிள்ளைகள் பிறக்க வாய்புண்டே! எப்படியோ **அன்னிய நுகப்பிணைப்பு** என்பது தேவன்

விரும்பாத ஒன்று என்பதை நமக்கு திருஷ்டாந்தமாய் எழுதப்பட்டுள்ளது.

## அடுத்து இராட்சதர்கள் பற்றி:

**இராட்சதர்கள் தேவகுமாரர்களுக்கும்** மனுஷகுமாரத்திகளுக்கும் பிறந்தவர்கள் என்று ஒரு **வசனமே வேதத்தில் இல்லை.** ஆதி. 6:4ஐ வாசித்தால் அந்நாட்களில் **இராட்சதர்** பூமியில் இருந்தார்கள். பின்பு தேவகுமாரர் மனுஷகுமார்த்திகளோடே கூடுகிறதினால் இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய **பலவான்களானார்கள்** என்று தான் எழுதப்பட்டுள்ளது.

ஆக இந்தப் **பரம்பரை வேறு - இராட்சதர்கள் வேறு** என அறியலாம். **இராட்சதர்களும் மனிதர்கள் தான்:** மனிதர்களைப்போல ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறப்பவர்தான். இவர்களின் **உருவம்,** குணாதிசயம், **வல்லமை** எல்லாமே நம்மைவிட வித்தியாசமாய் இருக்கும், இவர்கள் உருவாக்கிற ஆண் பெண் ஆகியவர்களின் **கருத்தரிக்கும்** தன்மைகளாலும், சூழ்நிலை, காலம் , இனம் , இடத்தாலும் இந்த விதமான வித்தியாசமான பிறப்பு உண்டாகிறது. Inter Caste Marrage பிற ஜாதி(Caste)- வேறொரு ஜாதியினரோடு ஒரு இனம்(Race) - வேறொரு இனத்தவரோடு திருமணம் செய்தவர்களுடைய பிள்ளைகள்கூட **அறிவிலும் உடலமைப்பிலும்** சற்று வித்தியாசமாய் இருப்பதைப் பார்க்கிறோம். சிலர் அதிக ஞானத்தோடு இருப்பார்கள். நம் சமுதாயத்தில்கூட **6 விரல்கள்,** பெரிய நீண்ட கால்கள், பெரியதும் பயங்கரமானதுமான தலை உள்ள பிள்ளைகள் பிறப்பதை காண்கிறோம். இப்படி வித்தியாசமாய்ப் பிறக்கிறவர்களில் **மிகவும் கொடூரமாய்** காணப்படுகிறவர்கள்தான் **இராட்சதர்கள்.** இவர்களுக்கும் குழந்தைகள் பிறக்கும் அவைகள் எல்லாமே இராட்சதர்களாகத்தான் இருப்பார்கள் என்ற கட்டாயமில்லை **கோலியாத்தே இராட்சதன்தானே!**

இதை வாசிக்கும் அன்பானவர்களே! **தேவதூதர்களுக்கு பலுகிப்பெருக்கும் அதிகாரம் இல்லை என்றும்** இங்கே சொல்லப்பட்ட **தேவகுமாரர்கள் தேவ பிள்ளைகள்தான்** என்றும் அறிவோம். வசனத்தெளிவு நமக்கு உண்டாகட்டும்.

## கன்னியாகுமரி டையோசிஸ்

நெய்யூர் CSI சபை பெண்கள் ஐக்கிய சங்கம் நடத்திய கூட்டம் இவர்களின் ஒரு பகல் கூட்டத்தில் செய்தி கொடுத்தேன். பெண்களின் தற்போதைய பொறுப்புகளை வசன அடிப்படையில் போதித்தேன். நெய்யூர் சிஎஸ்ஐ சபை தலைமை ஆயர் Rev.SAGAYAM அவர்கள் தலைமை தாங்கினார். ஆயர் மனைவி கூட்ட ஏற்பாடுகளை செய்தார். கூட்டம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக

# CSI SOUTH KERALA DIOCESE

## Paraniam CSI Church ஆண்டு விழா கன்வென்ஷன்



நாகர்கோவில் அருகே உள்ள பரணியம் CSI கன்வென்ஷன் சிறப்பாக நடந்தேறியது Rev.Ebinezar, Rev. Loues, Rev.Prabakar, Rev.Siby ஆகியவர்களின் தலைமையில் ஒவ்வொரு நாள் கூட்டமும் மிகச் சிறப்பாக நடந்தது.

பரணியம் சபை தலைமை ஆயர் Rev. Sathya Santhosh Kumar அவர்கள் ஜெபிக்கும் ஆயர். ஆகவே ஏற்பாடுகளும் ஜெபத்தோடு செய்யப்பட்டதை கூட்டத்தில் நடந்த அற்புதங்கள் மூலமாகவும் கூட்டம் தொடங்கும்முன் தெய்வம் மழையை நிறுத்தி கூட்டம் முடிந்தபின் மக்கள் வீடுகளுக்கு சென்று சேர்ந்தபின் தொடங்கிய மழை விடிய விடிய பெய்த கனமழையாக இருந்தது. பெரும் சாட்சியாக கூறப்பட்டது. இது கூட்டம் நடந்த நான்கு நாள்களும் நடைபெற்ற இயற்கை அதிசயம் ஆகும். தூர இடங்களிலிருந்தெல்லாம் மக்கள் குடும்பம்குடும்பமாக கூட்டங்களில் கலந்துக்கொண்டு கர்த்தரின் ஆசீர்வாதம் பெற்றார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.



# நகை அணியாலமா?



சர்ச்சைக்குள்ளானதைப்போலவே சபைகளுக்குள் தொங்கி நிற்கும் இக்கேள்விக்கு சத்தியத்தின்படி சரியான விடை காண வேண்டியது அவசியமாகிறது. **பூமியும் அதின் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.** (சங் 24:1). இவை யாவும் அவரால் உருவாக்கப்பட்டது என்பது முதலில் நாம் அறிந்துகொள்ளவேண்டியது. உலகத்தை உருவாக்கியதில் **சாத்தானின் பங்கு** எதுவும் இல்லை என்றாலும் ஆண்டவருடைய சிங்காசனத்திற்கு மேலாக தன்னை உயர்த்தவும் அவருடையவைகளை தன்னுடையவைகளாக்கி கொள்ளவும் திட்டமிட்டவன் அவன். கர்த்தர் படைத்த **கல்,பொன்,வெள்ளி** போன்றவை களுக்குள் **விதவிதமான உருவங்களை** சாத்தான் புகுத்தி அவைகளை வணங்கும்படி செய்தான். அவன் மனிதனுடைய தேவைகளுக்காக படைக்கப்பட்டவைகளை தெய்வங் களாக்கினான். கல்லும், மண்ணும், பொன்னும், வெள்ளியும் **வணக்கத்திற்காகவே விக்கிரகங்களாயின.** தெய்வத்தின் படைப்பை பாழ்படுத்த பிசாசு கையில் எடுத்த ஒரு ஆயுதம் தான் விக்கிரக வணக்கம். தேவன் நல்லதென்று கண்டவைகளுக்குள் நாக்கை நுழைத்து ருசிக்க விரும்பியவன் சாத்தான்.

எகிப்திலிருந்து தன் ஜனத்தை கர்த்தர் புறப்பட பண்ணினபோது ஒவ்வொரு ஸ்திரியும் தன் தன் அயலகத்தாரிடத்திலும் தன் தன் வீட்டில் தங்குகிறவரிடத்திலும் **வெள்ளி உடைமைகளிலும் பொன் உடைமைகளையும், வஸ்திரங்களையும் கேட்டு வாங்குங்கள் என்று கர்த்தர் கட்டளையிட்டார்.** அவைகளை உங்கள் குமாரருக்கும் உங்கள் குமார்த்திகளுக்கும் தரிபித்து அப்படியாக எகிப்தியரை கொள்ளையிடுவீர்கள் என்றார் கர்த்தர். (யாக் 3:22) எகிப்தில் அவர்கள் ஒடுக்கப்பட்டார்களே, கொடுமையாய் வேலை வாங்கப்பட்டார்களே, கொடுமையாய் நடத்தப்பட்டார்களே. (யாத். 1:11, 13,14) **உங்களுக்கு வைக்கோல் கொடுப்பதில்லை.** (யாத். 5:10) என்று சொன்ன எகிப்தியர்கள் அவர்களுக்கு போதிய உணவையும் ஊதியத்தையும் கொடுத்திருப்பார்களோ? நிச்சயமாக இல்லை. எகிப்தில் அவர்கள் பட்ட பாடுகளுக்கும் அடிமைதனத்திற்கும் ஏற்ற பலனாகவே அவைகளை கர்த்தர் அள்ளிகொடுத்தாரோ? இதைத்தான் காதுகளில் காதணியுடனும், **உன் தலையின்மேல்** சிங்காரமான கிரீடத்துடனும் **பொன்னினாலும்,** வெள்ளியினாலும் நீ அலங்கலரிக்கப்பட்டாய் என்றும் ஆண்டவர் நினைத்துப் பார்க்கின்றாரோ. (எசே. 16:13, 16)

**எகிப்திலிருந்து தேவன் எடுத்துக்கொடுத்தவைகளை எப்படியாகிலும் திரும்ப எடுத்து கெடுத்துவிடவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தான் சாத்தான்.** இளைப்படைந்திருந்த நேரத்தில் **ஜனங்களை ஏவிவிட்டான்.** "நீர் எழுந்து எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை உண்டுபண்ணும்"(யாத் 32:1)என்று ஜனங்கள் சொன்னபோது **ஆரோன்** அவர்களை நோக்கி, "உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளை **கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள்"** என்றான் (யாத் 32:2) அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் **பொன்னை** வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, **ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். காதுகளிலிருந்ததை கன்றுக்குட்டியாக்கினான்.** இஸ்ரவேலரே உங்களை

எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் **தெய்வங்கள் இவைகளே** என்று (யாத் 32:4) **எகிப்தியருடைய தங்கத்தை தன்னுடன் இணைத்துக்கொண்டான் சாத்தான்.** அந்தக் கன்றுக்குட்டியும் நடனத்தையும் கண்டபோது. **மோசே** கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த கர்த்தர் எழுதியகொடுத்த பலகைகளை மலையின் அடியிலேயே எறிந்து உடைத்துப்போட்டு, அவர்கள் உண்டுபண்ணின தங்கத்தால் செய்யப்பட்ட கன்றுக்குட்டியை எடுத்து அக்கினியில் சுட்டெரித்து அதைப் பொடியாக அரைத்து குடிக்கும் தண்ணீரின்மேல் தூவி அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான். (யாத் 32 :19, 20) **எகிப்திலிருந்து வாங்கப்பட்ட பொன் ஆபரணங்கள் எறிக்கப்பட்டுபோயிற்று.** இது சத்துருவின் சதியல்லவா. எனக்கும் வேண்டாம் உனக்கும் வேண்டாம் என்ற நிலைக்கு தள்ளிவிட்டான். ஆண்டவர் பொன் ஆபரணங்களைஅணிவித்தார். சாத்தான் அவகளைஅழித்துவிட்டான். இஸ்ரவேலரிடமிருந்து பொன் ஆபரணங்களை சாத்தான் அழித்ததின் இரகசியம் இதுவே. பொன் ஆபரணங்களை அணிந்துகொண்டதின்நிமிததம் அல்ல!. **அவைகளை கன்றுகுட்டி ஆக்கினதின் நிமித்தமே கர்த்தர் அவர்களை உபாதித்தார்.** (யாத் 32:35). **ஆபரணங்களுடன்** சென்றுகொண்டிருந்த இஸ்ரவேல் மக்களை பார்வோன் பின்தொடர்ந்த போது **சமுத்திரத்தின் ஜலத்தினை** பிளந்து பிரிந்து போகசெய்து வெட்டாந்தரையிலே அற்புதமாக அவர்களை நடந்துபோக செய்தார். (யாத் 14:21,22) இதனையே பவுல் இப்படியிருக்க சகோதரரே நீங்கள் எவைகளை அறியவேண்டும் என்றிருக்கிறீர்கள் என்றால் நம்முடைய பிதாக்கள் எல்லோரும் மேகத்துக்கு கீழாய் இருந்தார்கள். எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் **சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.**(1.கொரி 10:1,2) என்று குறிப்பிடுகின்றார். அப்படியென்றால் இஸ்ரவேல் மக்கள்தாங்கள் அணிந்துகொண்டிருந்த பொன் ஆபரணங்களோடும் அணிகலன்களோடும்தான் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதில் மாற்று கருத்து இல்லையே!. கல்லை, இரும்பை, பொன்னை, வெள்ளியை உபயோகிக்கலாம் ஆனால் **வணங்கக்கூடாது.அதை வணங்காமல்** அதை அது வீசி எறியப்படவேண்டியது ஆகும்.

**மணவாளன் ஆபரங்களினால் தன்னை அலங்கரித்து கொள்கிறதர்க்கும் மணவாட்டி நகைகளினால் தன்னை சிங்காரித்துக்கொள்கிறதற்கும் ஒப்பாக** அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி நீதியின் சால்வையை எனக்கு தரித்தார். (ஏசா. 61:10) என்றும் ஒரு பெண் தன் ஆபரணத்தையும் ஒரு மனவாட்டி தன் ஆடைகளையும் மறப்பாளோ? என் ஜனங்களோ எண்ணி முடியாத நாட்களாய் என்னை மறந்துவிட்டார்கள் (எரே. 2:32) என்றும் சொல்லப்படுகிறதே **"ஒப்பாக"** என்பது "தப்பாக"(பிழையாக) அர்த்தப்படுத்தப்பட வில்லை. ஆபிரகாம் **மிருக ஜீவன்களும் வெள்ளியும், பொன்னுமான ஆஸ்திகளை** உடைய சீமானாய் இருந்தான் (ஆதி 13:2)என்று வாசிக்கிறோமே. நீங்கள் **எனக்கு ஒப்பாக** வெள்ளியினாலே **தெய்வங்களையும் பொன்னினாலே** தெய்வங்களையும் உங்களுக்கு **உண்டாக்கவே வேண்டாம்.** (யாத். 20:23) என்பதே அவர் ஆணை. ஐயையோ, சல்லாவும் இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து பென்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துகளினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த மகா நகரமே ஒரு நாழிகையிலே இவ்வளவு **ஐஸ்வர்யமும் அழிந்துப்போயிற்றே** என்று சொல்லி சத்துருவின் நகரம் அழுது துக்கிக்கும்போது (வெளி 18:16) அதே சமயம் தெளிவுள்ள பளிங்குபோல சுத்த பொன்னாய் இருக்கிற வீதியிலே ( வெளி 21:21) நாம் உலவி கொண்டிருப்போம் என்பதே பரலோகமாகிய காணானுக்குள் நாம் நுழைய காத்திருக்கும் செய்தியாகும்.

அவருடைய பிள்ளைகள் பரலோகத்தில் மேலே வாசித்த அந்த உன்னத நிலையினை அடையும்போது **பொன்,வெள்ளி,செம்பு,கல்,மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளான காணவும் கேட்கவும்,நடக்கவுமாட்டாதவைகளாய் இருக்கிற விக்கிரகங்களைவிட்டு அனேகர் மனந்திரும்பவும் இல்லையே.** (வெளி 9:20) என்பதையும் வேதம் குறிப்பிட்டு கூற தவறவில்லை. தங்கம் ஒரு **விக்கிரகம்** என்றும் அதை அணிவது தவறு என்றும் நினைப்பவர்கள் தங்களிடம் இருக்கும் நகைகளை விற்கத்தானே செய்கிறார்கள். நகைகளை விற்று காசாகவும் சொத்தாக வாங்கியும், வங்கியில் வைத்து நகை அணிவதை பாவம் கூறுகிறவர்கள் அதை வீதியில் வீசிவிடுவதில்லையே!. மனுஷன் பணிந்துகொள்ள தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும் மூஞ்சூறுகளுக்கும், துருஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான். ( ஏசா 2:21) என்றல்லவோ வாசிக்கிறோம். தங்கத்தையே விக்கிரகம் என்ற வார்த்தைக்குள் அடக்கி வாசிக்கும் ஒருசில சபைமக்கள் தங்க தரை பதித்த பரலோகத்திலும் கால் பதிக்ககூடாது. **தங்க கிரீடம் தலையில் அணிந்துகொண்டு** சிங்காசனத்தின் முன்னே **ஜெய கீதம் பாடலாம்** என்பதற்கான முன்னோட்டமாக தங்க ஆபரணங்களை அளவோடு உபயோகித்து எச்சரிக்கையுடன் வாழ கற்றுக்கொள்வோம். பண ஆசை எல்லா தீமைக்கும் வேர் என்று 1 தீமோ 5:10ல் எழுதியிருக்கிறது. ஆனால் பணம் வேர் என்று குறிப்பிடவில்லை. பணத்தின்மேல் உள்ள ஆசை அதுதான் ஆபத்து. அதுபோல நகை அணிவது பாவம் அல்ல. நகையின் மேல் உள்ள ஆசை,வெறி இவைகள்தான் பாவம்.

தேவனுடைய பிள்ளைகள் தங்கத்தை ஆபரணமாக அணிவது தவறல்ல. அதை விக்கிரகமாக்கிக் கொள்ளாமல் தேவைக்குமேல் தேவதைப்போல காட்சி தராமல் தங்களை காத்துக்கொள்ள வேண்டும். தேனை கண்டுபிடித்தாயானால் **மட்டாய் சாப்பிடு: மிதமிஞ்சி சாப்பிட்டால் வாந்தி பண்ணுவாய்.** (நீதி 25:16) என்று சாலமோன் சொன்னதை போல மிதமிஞ்சி ஆசைக்கொண்டால் அவருடைய வாயிலிருந்து வாந்தி பண்ணப்படுவோம்.

சியோன் குமார்த்திகளைப்போல அகந்தையாயிருந்து ஆபரணங்களை தரித்தால் ஆபத்துதான் என்பது வேதம் சொல்லும் ஒரு எச்சரிப்பின் செய்தியாகும். (ஏசா. 3:16-23) சரீரத்தில் நகைகளை அணிந்துகொண்டு வந்தவர்கள் சமுத்திரத்தை தாண்டிவிட்டாலும் ஆண்டவரை அறிந்துகொள்ளாததினால் தங்கள் ஆத்துமாக்களை குறித்து கவனம் கொள்ளாததினால் தானே, **கானனுக்குபோகும்முன் சடலங்களாகி போனார்களே!.** ஆத்துமாவை விட்டுவிட்டு நகைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுவிடக்கூடாது என்பதே பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும் ஆலோசனை. (1 தீமோ 2:9. 10) பேதுரு எழுதுவதும் அதுவே!. (1 பேதுரு 3:3) நகைகளை கழுத்து முழுவதும், உடல் முழுவதும் அள்ளிபோட்டுக்கொண்டு (நகை கடை மாதிரி பொம்மைபோல்) வாழ்ந்து கர்த்தருக்கு வாழ்க்கையில் இடம் கொடுக்காமல் **பாவ மன்னிப்பையும் இரட்சிப்பையும்** குறித்து கரிசனை கொள்ளாமல் வெள்ளையடிக்கப்பட்ட **கல்லறையாய் வலம் வருபவர்களை தங்க கன்றுகுட்டிகளாகவே** சாத்தான் மாற்றி வைத்திருக்கிறான் என்பதில் சந்தேகம் இல்லை. ஜாமக்காரன் வாசகர்களும் ஜாக்கிரதையாக செயல்படுங்கள். எல்லாவற்றிலும் சாட்சியுடன் வாழுங்கள். நகை அணிவது பாவமா-இல்லையா என்பது பிரச்சனையல்ல என்பதுதான் முக்கியம். 1பேதுரு 3:1-5ல் உள் அலங்காரம்- வெளி அலங்காரத்தைப்பற்றி பேதுரு எழுகிறார். **உள் அலங்காரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டால் வெளி அலங்காரமத்தைப்பற்றி கவலையும் இருக்காது. ஆசையும் இருக்காது.** அப்படிப்பட்டவர்களுக்கு நகை போட்டாலும், போடாவிட்டாலும் அதன் மீது நாட்டமும் இருக்காது. ஆசையும் இருக்காது. நாமும் நம் சரீரமும் கர்த்தருக்குள்ளது கர்த்தர் நமக்குள் இருந்தால் உலக பிரகாரமான நகைக்குறித்தோ, பணத்தைக்குறித்தோ,சொத்தைக்குறித்தோ அக்கறை கொள்ளமாட்டோம். அதைப்பற்றி சிந்திக்கவே மாட்டோம்.

## இலங்கை ஊழியங்கள்:

= 2017 நவம்பர் 8 முதல் 13வரை இலங்கையில் கெண்டி-Christ Churchல் கன்வென்ஷன் நடைபெறுகிறது. தொடர்புக்கொள்ள தொலைபேசி எண்: Fr.Perananthna- 0094-776054001.

= 2018ம் வருடமும் இலங்கை கூட்டங்கள் திரிகோணமலை(Trinkonmale)யில் ஜனவரி 8,9,10 தேதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைப்பற்றி விவரங்களுக்கு தொடர்புக்கொள்ள சகோ.Muraleetharan செல்.0091-773101405 அல்லது 0091-752228163.

## அரேபிய ஊழியங்கள்:

= அப்படியே அரேபிய நாட்டில் உள்ள ஷார்ஜா(தமிழ்)சபையிலிருந்தும் அழைப்பு வந்துள்ளது. ஆனால் தேதிகள் இன்னும் முடிவாகவில்லை. விவரங்கள் கிடைத்தவுடன் அறிவிக்கிறேன்.- ஜெபிக்கவும்.

NOVEMBER 2017

# Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

**Annual Subscription:**
**India** - Rs.60/
**Foreign** - Rs.600/

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.